தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் உமையாள்புரம் அரசு உதவி பெரும் உயர் நிலைப் பள்ளி வளாகத்தில் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி. செழியன் நேற்று (31.05.2025) துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர்.சுதா, பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் முனைவர்.எம்.ஹெச்.ஜவாஹிருல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன். கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ். விஜயன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

கருவுறுதலுக்கு முன் – பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும்

தொழில் நுட்ப முறைகள் மேம்படுத்தும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்து விழா பேருரை!

சென்னை, ஜூன் 1 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (31.05.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில், 2025-26 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு எண் 91ன்படி, கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் செயல் திட்டத்தை மேம்படுத்தும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாமினைதொடங்கி வைத்து விழா பேரூரையாற்றினார்கள்.

பிறகு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையில் மக்கள் நல்வாழ்வுத்துறையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, 122 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்ட 122 அறிவிப்புகளில் இதுவரை 96 அறிவிப்புகளுக்கான அரசாணைகள் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் 4 அறிவிப்புகள் செயலாக்கம் பெற்று முடிவுற்றிருக்கிறது. அந்த வகையில் அறிவிப்பு எண் 91 இன்று செயலாக்கம் பெற்றிருக்கிறது. அ.எண் 91 என்பது கருவின் தன்மையை வெளியிட தடையும், அச்சட்டத்தினை திறம்பட செயல்படுத்துவது ஆகும். அந்த வகையில் நான்கு மண்டலங்களாக தமிழ்நாட்டைப் பிரித்து சென்னை, கோவை, மதுரை, கன்னியாகுமரி ஆகிய 4 மண்டலங்களில் கருவுறுதலுக்கு முன்மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவுரும் தன்மையை தொழில் நுட்ப முறையில் பாலினத் தேர்வை தடை செய்யும் சட்டம் 1994 அதன் செயல் திட்டத்தை மேம்படுத்தி டும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி இன்று வழங்கப்படவிருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பாலின தேர்வைதடைசெய்தல்சட்டம், (Pre-Conception and Pre-Natal Diagnostic Techniques Act (PCPNDT) Act 1994ன்படி, பதிவு பெற்ற அரசு மற்றும் தனியார் ஸ்கேன் நிலையங்கள் 8922. அதில் சென்னையில் மட்டும் 2059 பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற சமயத்தில் குழந்தை பாலின விகிதம் என்பது 1000 ஆண் குழந்தை களுக்கு 931 பெண் குழந்தைகள் எனும் விகிதம் இருந்ததை இந்த அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகள் மகப்பேறு இறப்பு விகிதம், குழந்தைகள் பிறப்பு இறப்பு விகிதம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருவதன் மூலம் 940 பெண் குழந்தைகள் என்று வந்திருக்கிறது. இந்த அரசின் இலக்கு என்பது ஆண் குழந்தைகளுக்கு சரிசமமாக பெண் குழந்தைகள் இருக்க வேண்டும் என்கின்ற இலக்கை எட்டுகின்ற வகையில் இந்த சட்டத்தின் அம்சங்களை அனைவரும் புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்த பயிற்சி முகாம் இன்று தொடங்கி வைக்கப்படுகிறது. மேலும் பாலினதேர்வைதடைசெய்தல்சட்டம், (Pre-Conception and Pre-Natal Diagnostic Techniques Act (PCPNDT) online portal இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு மற்றும் தனியார் ஸ்கேன் சென்டர்களில் புதிய விண்ணப்பங் கள் புதுப்பித்தல் மற்றும் கட்டணம் செலுத்துதல், மருத்துவர்கள் இணைப்பு மற்றும் நீக்கம், ஸ்கேன் இயந்திரங்கள் இணைப்பு மற்றும் நீக்கம் ஆகியவை manual நடைமுறையில் இருந்தது, அது முழுமையாக மாற்றப்பட்டு por tal முறையில் மாற்றப்படவிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் தனியார் மருத்துவர்கள் மற்றும் மருத்து வமனைகள் அரசுடன் இணைந்து மகப்பேறு சம்மந்தமான அனைத்து நடைமுறை மற்றும் சிக்கல்களை சட்டப்படி எப்படி கையாள்வது என்பதை தெரிந்து கொள்ளும் வகையில் கையேடு அரசின் சார்பில் வெளியிட்டிருக்கிறோம். மகப்பேறு மருத்துவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றி இக்கையேடு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றுகின்ற மகப்பேறு மருத்துவர்களுக்கு பெரிய அளவில் உறுதுணையாக இருக்கும். இந்த கையேட்டிற்கு உயிர் தரும் தாய்மார்கள் உயிர் வாழ வேண்டும் என்று தலைப்பிடப்பட்ட அந்த கையேடு இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கிறது.

கோவிட் தொடர்பான கேள்விக்கு

2020ம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தால் பெருந்தொற்றாக அறிவிக்கப்பட்ட கோவிட்-19, உலகளவில் பெரும்பாதிப்பினை ஏற்படுத்திய போதும், அரசின் மருத்துவ கட்டமைப்பினை மேம்படுத்துதல், பொதுமக்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் தீவிரமாக கோவிட்- 19 தடுப்பூசியினை வழங்கியதன் வாயிலாக, கோவிட்-19 பெருந்தொற்றில் இருந்து மீண்டு, வைரஸின் வீரியம் குறைந்து, தற்போது சமூக பரவலாக மட்டுமே காணப்படுகிறது. 2023 மே 5 அன்று உலக சுகாதார அமைப்பு (WHO) கோவிட் 19 ன் பொதுச் சுகாதார அவசர நிலை முடிவடை வதாக அறிவித்தது. உலக சுகாதார நிறுவனத்தின் மூலமாக 04.05.2025 அன்று வெளியிடப்பட்ட வாராந்திர தொற்று நோய் குறித்த அறிக்கையின்படி தெற்கு ஆசிய நாடுகளான இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் கோவிட்-19 சமூக பரவலில் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுவதாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், விரீயம் இழந்த ஓமைக்கரான் வகை கொரோனா வைரஸ்களின் வகைகளான JN.1, XEC போன்றவைகளே காணப்படுவதாகவும், புதிதாக எவ்விதமான உருமாறிய கொரோனா வைரஸ்களும் பரவவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகளவில் தற்போது வரை 91,583 கோவிட் தொற்றுகள் பதிவாகி உள்ளன. இந்திய அளவில் 1,800 கோவிட் தொற்றுகள் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் மே மாதத்தில் 293 கோவிட் தொற்றுகள் பதிவாகி உள்ளன. அதில் 148 நபர்கள் தற்போது கண்காணிப்பில் உள்ளனர். இந்த ஆண்டு கோவிட்-19 நோய் பரவல் சமூகத்தில் மிக குறைந்த அளவே காணப்படுகிறது. மேலும் நோய் காணப்பட்ட நபர்களுக்கு எவ்வித தீவிர தொற்றிக்கான அறிகுறிகளும் காணப்படவில்லை.

தமிழ்நாட்டில் நிகழ்வாண்டில் இணை நோய்களுடன் உள்ள நபர் கோவிட் தொற்றும் கண்டறியப்பட்டு உயிரிழந்துள்ளார். ஏப்ரல் 2025 மாதத்தில் பதிவான கோவிட் தொற்றுகளிலிருந்து 26 மாதிரிகள் அங்கீகரிக்கப்பட்ட கோவிட் ஆய்வகங்களிலிருந்து மாநில பொது சுகாதார ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டு, அவற்றில் 19 மாதிரிகள்புனேயிலுள்ளதேசியவைரஸ்நிறுவனத்திற்கு (Natonal Institute of Virology (NIA) அனுப்பப்பட்டன. இதில் SARS CoV-2 வைரஸின்ஓமிக்ரான்வகைகள் (JN.1, LF.7, NB.1.8.1, MV.1, BA.3) மட்டுமே தமிழ்நாட்டில் கொரோனா தொற்றுக்கு காரணமாக இருப்பது உறுதி செய்யப்பட்டது. புதியவகைஎதுவும்கண்டறியப்படவில்லை. நாள்தோறும் கோவிட் தொற்றுகள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையால் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் அனைத்தும், COVID-19 குறித்து முன்னெச்சரிக்கையாக தேவையான மருத்துவ வசதிகள், மனித வளங்கள், மருந்துகள் மற்றும் பரிசோதனைத்திறன் ஆகிய வற்றை தயார்நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் 99,425 படுக்கைகள் கோவிட் நோயாளிகளுக்கு சிகிச்சைக்காகதயார் நிலையில் உள்ளன. பொதுமக்கள் கூட்ட நெரிசலான இடங்களில் முகக்கவசம் அணிவது, இருமும் போதும் / தும்மும் போதும் சரியான சுகாதார வழிமுறைகளை கடைபிடித்தல் மற்றும் கைசுத்தம் பேணுவது அவசியம். காய்ச்சல், சுவாச மண்டலத்தில் தொற்றிற்கான அறிகுறிகள் உள்ளவர்கள் குறிப்பாக இணை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அருகிலுள்ள மருத்துவரை அணுகி உரியசிகிச்சை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தமிழ்நாடு அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது, எனவே பொதுமக்கள் அச்சப்படதேவையில்லை.

டெங்கு தொடர்பான கேள்விக்கு

டெங்கு பாதிப்பு என்பது 2017, 2012 ஆகிய ஆண்டுகளில் தான் அதிகபட்ச பாதிப்பு மற்றும் உயிரிழப்புகள் ஏற்பட்டது. 2012 இல் 66 பேர், 2017 இல் 65 பேர் இதன்பிறகு இந்த அரசு பொறுப்பேற்றபிறகு 10 மற்றும் 12 ஆகிய நிலையிலேயே இருந்து வருகிறது. இன்னும் டெங்குவினால் ஏற்பட்ட இறப்புகள் என்பது நான் ஏற்கெனவே சொன்னது போல் இணை நோயினால் ஏற்படுவது தான். நேற்றைக்கு டெங்கு பாதிப்பு என்பது 35. அதுவும் மழைக் காலம் என்பதால் டெங்கு காய்ச்சல் அதிகமாக வரும். உயிரிழப்பு என்பது இல்லாத நிலை தற்போது வரை உள்ளது. தற்போது வரை இந்தாண்டு இதுவரை 4 உயிரிழப்புகள் மட்டுமே ஏற்பட்டுள்ளது. ஆகவே உயிரிழப்புகள் அதிகம் ஏற்படாதவரை கண்காணிக்கப்பட்டு டெங்கு பாதிப்பு என்பது கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, கூடுதல் இயக்குநர்கள் மரு. பாலசந்தர், மரு.சித்ரா, இணை இயக்குநர் மரு. மீனாட்சி சுந்தரி மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், இணை இயக்குநர்கள், மருத்துவப் பேராசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்களுக்கு

மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்

மதுரை கூடல்மா நகர் ஊத்தன்குடி கலைஞர் திடலில் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (01-06-2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9-00 மணிக்கு நடைபெறும் பொதுக்குழு கூட்டத்திற்கு வருகை தரும் நமது சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநிலமாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் காலை 8 மணிக்கு நமது மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அரங்கில் மினிட் புத்தகத்தில் கையொப்பமிட்டு தங்களுக்கு உண்டான பொதுக்குழு பேட்ஜை பெற்றுக்கொண்டு அவரவர் இருக்கையில் அமரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மா.சுப்பிரமணியன்
மாவட்டக் கழகச் செயலாளர் – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

தென்மேற்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (31.05.2025) நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) நே.பொன்மணி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர்.இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

அன்னம் தரும் அமுதகரம் 101வது நாள்!

துறைமுகம் தொகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜூன் 01- சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 101வது நாள் துறைமுகம் தொகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 101 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (31.5.2025) 1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 59 N.S.C போஸ் ரோடு (டெலிபோன் ஆபீஸ்) எதிரில். 2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55 ஆ கோவிந்தப்பா தெரு, தாத்தா முத்தையப்பன் தெரு சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.இ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதீஷ்குமார், வே. பா.பிரபாகரன், லண்டன் முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடி கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

சேலம் மத்திய மாவட்டத்தில் திருவுருவச் சிலைக்கு மாலை!

மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், ஜூன் 1- சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்தநாளான ஜூன் 03 செவ்வாய்க்கிழமை அன்று காலை 08.30 மணி அளவில் சேலம் மத்திய மாவட்டக் கழகத்தின் சார்பில் 4-ரோடு அண்ணா

பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்குமாவட்டக் கழக, மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, பகுதிக் கழக, பேரூர் கழக, ஊராட்சிக் கிளைக் கழகசெயலாளர்கள், பேரூர் வார்டு கழக செயலாளர்கள், மாநகர வட்டக்கழக செயலாளர்கள், மாவட்டக் கழக பிரதிநிதி கள், அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள் மற்றும் தலைவர் கலைஞர் மீது பற்றுள்ள பொதுமக்கள்என அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் – பாபநாசம் வட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்!

325 பயனாளிகளுக்கு ரூ 1 கோடியே 63 லட்சம் மதிப்பில் மானியத்துடன் கூடிய கடனுதவி!

அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்!

தஞ்சாவூர், ஜூன் 1- தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம்களை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்து 25 மகளிர் சுயஉதவி குழுக்களில் உள்ள 325 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 63 இலட்சம் மதிப்பிலான மானியத்துடன் கூடிய கடனுதவிகளை வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டத்திற்குட்பட்ட 5 இடங்களில் மக்களுடன் முதல்வர் முகாம் நிகழ்ச்சிகள் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் நேற்று (31.05.2025) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமை வகித்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர்.சுதா. பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், கும்பகோணம் சார் ஆட்சியர் திருமதி.ஹிருத்யா எஸ்.விஜயன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் உமையாள்புரம் ஊராட்சிக்குட்பட்ட அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி, சத்தியமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட நக்கம்பாடி சமுதாயக்கூடம், பண்டாரவடை ஊராட்சிக் குட்பட்ட ஜைனுல் உலூம் கல்யாண மண்டபம், வழுத்தூர் ஊராட்சிக் குட்பட்ட சௌகத்துல் இஸ்லாம் அரசு உதவி பெறும் ஆரம்ப பள்ளி, பசுபதி கோவில் ஊராட்சிக் குட்பட்ட மகளிர் சுய உதவிக்குழு பயிற்சி கட்டிடம் ஆகிய 5 இடங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 25 மகளிர் சுயஉதவி குழுக்களில் உள்ள 325 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 63 இலட்சம் மதிப்பிலான மானியத்துடன் கூடிய கடனுதவிகளை வழங்கி உயர் கல்வித் துறை அமைச்சர் பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் படி, மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் மூன்றாம் கட்டமாக பாபநாசம் வட்டத்தில் 5 இடங்களில் நடைபெறுகிறது. முதலமைச்சர் அவர்களின் ஆணையின் படி ஏழை எளியோர் நலன் காக்க ஏராளமான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைபெண் திட்டம். இன்னுயிர் காப்போம், தமிழ்ப் புதல்வன் திட்டம், விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் போன்ற திட்டங்கள் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கல்வி வளர்ச்சியில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தாழ்த்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர். பிற்படுத்தப்பட்டோர் கல்வி உரிமை பெறுவதற்கு சட்டப் பாதுகாப்பையும் சமூக நீதியினையும் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் பெற்றுத் தந்தார்கள். சமூக நீதியினையும் கல்வி உரிமையினையும் தொடர்ந்து அக்கறையுடன் முதலமைச்சர் காப்பாற்றி வருகிறார். பல்வேறு திட்டங்களின் மூலம் அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் மக்களை தேடி மக்களது குறைகளை களைய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். பொதுமக்கள் இத்திட்டங்களை பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்.

மேலும், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் மக்களுடன் முதல்வர் முகாமில் பதிவு செய்து உடனடி தீர்வாக தொழிலாளர் நலத்துறை சார்பில் தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் அட்டைகள், முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு அட்டைகள், புதிய குடும்ப அட்டைகள் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் சமூக பாதுகாப்புத் திட்டம் தனித்துணை ஆட்சியர் பெ.மணிமாறன், பாபநாசம் வட்டாட்சியர் தா.பழனிவேலு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் க.விஜயலட்சுமி, ந.சிவகுமார் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.